முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 111/2021

தேதி : 26-02-2026

(பி.வா.சா.1) – திருமதி.வனிதா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 9ம் வகுப்பு. தமிழ் எழுத படிக்க நன்கு தெரியும் என்றால் ஆமாம். என் கணவர் என்ன படித்திருக்கிறார் என்றால் 9ம் வகுப்பு. அவருக்கும் தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் ஆமாம். என் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் கூலி வேலை. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீட்டில் உள்ளேன். வாதியை எனக்கு எத்தனை ஆணடுகளாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். நானும் வாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். வழக்கு சொத்து நான் வசிக்கும் ஊரில் தான் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் தாயாரிடம் இருந்து பாத்தியம். செட்டில் மெண்ட் ஆவணம் மூலமாகவா என்றால் ஆமாம். வாதிக்கு எழுதி கொடுத்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். பதிவாளர் அலுவலகம் சென்று நான் பதிந்து கொடுத்தேன் என்றால் ஆமாம். அவர்கள் எனக்கு கடனாக கொடுத்த தொகைக்கு பதிலாக பதிந்து தர சொன்னார்கள். அந்த ஆவணத்தில் கடனுக்காக கொடுக்கப்பட்டது என்று வாசகம் உள்ளதா என்றால் இல்லை. நான் கையெழுத்து மட்டும் தான் போட்டேன். கிரைய ஒப்பந்தத்தை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை. நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றும், பதிவாளர் அது என்ன ஆவணம் என்று என்னிடம் விளக்கி சொன்னார் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் என் கணவர் சாட்சி கையெழுத்து இட்டாரா என்றால் தெரியாது. சாட்சியடம் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையெழுத்தை காண்பித்தபோது 2வது சாட்சி கையெழுத்து தன்னுடைய கணவருடையது என்று ஒப்புக்கொண்டார். கிரைய ஒப்பந்தத்தின் நகலை நானும் என் கணவரும் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை. பதிவு செய்யும் போதாவது அந்த ஆவணம் என்ன ஆவணம் என்று கேட்டு தெரிந்து

கொண்டேனா என்றால் இல்லை. 03.01.2019ல் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அதற்கு பதில் அறிவிப்பு நாங்கள் அனுப்பவில்லை என்றால் ஆமாம் ஆனால் நேரில் போய் கேட்டேன் அதற்கு அவர் வட்டிக்காக சும்மா அனுப்பப்பட்டது என்று சொன்னார். அந்த அறிவிப்பில் கிரையம் பதிந்து தர சொல்லப்பட்டிருந்தது என்றால் ஆமாம் அதைத்தான் அவரிடம் கேட்டேன். மேற்படி அறிவிப்பை நான் பெற்றுக்கொண்ட பிறகு நான் வாதியிடம் 6 மாத கால அவகாசம் பதிந்து தர கேட்டேன் என்றால் நான் அப்படி கேட்கவில்லை. நான் பதிந்து தராததால் தான் மீண்டும் வாதி 18.07.2019ல் ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. இரண்டாவது அறிவிப்பை நான் பெற்றுக்கொள்ளவில்லை. நான் சொல்வது தவறு என்றும் 2வது அறிவிப்பை நானும் என் கணவரும் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை. வ.சா.4 மற்றும் வ.சா.6ல் உள்ள கையெழுத்து என் கணவருடையது மற்றும் என்னுடையது என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கும் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் இல்லை. கடனுக்காக தான் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்த விபரமே முதல் அறிவிப்பு வந்த பிறகு தான் தெரியும். அந்த விபரம் தெரிந்த பிறகாவது வாதி மீது காவல் நிலையத்தில் புகாரோ அல்லது நீதிமன்றத்தின் மூலும் நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் நீதிமன்றத்தை நாட சொன்னார்கள். புகார் கொடுத்ததை காட்டக் கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் புகாரை எடுக்கவில்லை. நான் சொல்வது உண்மையல்ல என்றும், நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி எங்களை தவறாக பேசியதாக சொல்லியுள்ளேன் என்றும் அதை பொறுத்து புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 1 இலட்சம் ரூபாய் எந்த தேதியில் யார் முன்னிலையில் வாதியிடம் கொடுத்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை என் கணவர் தான் கொடுத்தார். 2018லேயே அந்த தொகையை கொடுத்து விட்டோம். மேற்படி தொகையை கொடுத்த பிறகு ஆவணத்தை ரத்து செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் 4 லட்சத்தில் 1லட்சம் கொடுத்தோம் 3லட்சத்திற்கு வட்டி கொடுத்து கொண்டு இருந்தோம் எனவே நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த விபரத்தை என்னுடைய எதிர்

வழக்குரையில் சொல்லவில்லை என்றால் வட்டிக்கு வாங்கியதாக சொல்லியுள்ளேன். மீண்டும் வாதி எங்கள் வீட்டிற்கு வந்து தகராறு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றும் அதை பொறுத்து புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த தகறாறும் நடக்கவில்லை என்றும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்து மதிப்பு 20இலட்சம் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் வழக்கு சொத்தின் மதிப்பு 7 இலட்சம் என்றால் சரியல்ல நான் வட்டிக்காக தான் வாங்கினேன். நான் கிரையம் கொடுக்கவில்லை சொத்து மதிப்பு சொல்வதற்கு. எதிர் வழக்குரையில் அப்படி சொல்லியிருந்தால், நான் அப்படி சொல்லவில்லை. வாதி மீதும் சாட்சிகள் மீதும் நில அபகரிப்பு நடவடிக்கை எடுக்கப்போவதாக சொல்லியுள்ளேன் என்றும் அப்படி எடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி கந்து வட்டி தொழில் செய்கிறார் என்றும் அது சம்பந்தமாக புகார் கொடுப்பதாக சொல்லியுள்ளேன் என்றும், அப்படி எதாவது புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை ஆனால் கந்து வட்டி தொழில் தான் செய்கிறார். நான் சொலவது போல் வாதியோ அவரது கணவரோ கந்து வட்டி தொழில் செய்யவில்லை என்றும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்பதால் வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் போட்டார்கள் என்றால் சரியல்ல. நான் விற்கவேண்டும் என்ற எண்ணத்திலும் வாதி வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலும கிரைலய ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முன் தொகை பெற்றுக்கொண்டுதான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லக்கூடியது மற்றும் மறுபயண் கொண்டது என்று சொன்னால் சரியல்ல. மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையம் பெற வாதி தயராக இருக்கிறார் என்றால் நான் தயராக இல்லை. தாவா சொத்தின் மதிப்பு தற்போது அதிகமாகி விட்டதால் உண்மைக்கு மாறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வரை கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும் கந்து வட்டிக்காக தான் கிரைய ஒப்பந்தம் நடைபெற்றது என்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் சரத்துகளை முழுமையாக படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதே போல் பதிவாளரும் அந்த ஆவணத்தை பற்றி என்னிடம் விளக்கி சொன்னார் என்று சொன்னால் சரியல்ல.

கிரைய ஒப்பந்தத்தின் முழு விவரம் தெரிந்து கொண்டு கிரையம் செய்து கொடுக்காமல் இருக்க உண்மைக்கு மாறாக கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு அனுமதிக்கபடத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./ K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.